செ.வெ.எண்: 543 27/8/09

O/o. the Minister for Tourism & Registration
27 AUG 2009
Chennai-9

## மின்னணு முத்திரை பதிப்பு (e-Stamp)

தமிழகத்தை மின்னணு ஆளுமையில் முதன்மை மாநிலமாகத் திகழச் செய்வதை குறிக்கோளாகக் கொண்டு பதிவுத்துறையில் கணினிமயமாக்கல் திட்டமான 'ஸ்டார்' திட்டம் 06.02.2000 அன்று தொடங்கி, இத்துறையில் 559 சார்பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டு, தற்போது இத்துறை கணினிமயமாக்கல் திட்டத்தில் முழுமை பெற்றுள்ளது.

போலி முத்திரைத்தாள் புழக்கத்தினை அறவே ஒழித்திடும் நோக்கில் முத்திரைத் தீர்வை செலுத்தும் முறைக்கு மாற்று ஏற்பாடாக, தமிழக அரசால் மின்னணு முத்திரைத்தாள் முறை 2006-07-ம் ஆண்டில் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, உரிய விதி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் மின்னணு முத்திரைத்தாட்கள் அனைத்து வகையான தன்மையுடைய ஆவணங்களையும் தடையின்றி பதிவதற்கு ஏதுவாக அமையும்.

அரசு கடித எண்.107/வணிகவரி மற்றும் பதிவுத்துறை நாள்: 06.11.2008-ன்வழி திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிட்டெட் (Stock Holding Corporation of India Ltd., - SHCIL) என்ற நிறுவனத்தினை மாநிலத்தில் மின்னணு பதிப்பு முறையினை அமுல்படுத்திட நியமிக்கப்பட்டும், தமிழ்நாட்டில் மின்னணு பதிப்பு முறையினை அமுல்படுத்திடவும், நிர்வகிக்கவும் பதிவுத்துறைத்தலைவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சென்னையில் தெரிவு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட 9 சார்பதிவாளர் அலுவலகங்களில் இதனை முன்னோடி திட்டமாக செயல்படுத்திடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

1. 1எண் இணைசார்பதிவகம், தென்சென்னை
2. 2எண் இணைசார்பதிவகம், தென்சென்னை
3. சார்பதிவகம், தியாகராயநகர்
4. 1எண் இணைசார்பதிவகம், மத்தியசென்னை
5. 2எண் இணைசார்பதிவகம், மத்தியசென்னை
6. சார்பதிவகம், திருவல்லிக்கேணி
7. சார்பதிவகம், மைலாப்பூர்
8. 1எண் இணைசார்பதிவகம், வடசென்னை
9. சார்பதிவகம், ராயபுரம்

அரசாணை எண்.105/வணிகவரி மற்றும் பதிவுத்துறை(ஜே1) நாள்: 06.11.2008-ன்வழி, இந்திய முத்திரைச் சட்டம் 1899-ன்படி தீர்வை செலுத்துதலினை தமிழக அரசின் சார்பில் **“மின்னணு மூலம் முத்திரைகள்”** செலுத்திட உரிய அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்.106/வணிகவரி மற்றும் பதிவுத்துறை(ஜே1) நாள்: 06.11.2008-ன்வழி, முத்திரைத் தீர்வை செலுத்துதற்கான மாற்று ஏற்பாடாக “மின்னணு மூலம் முத்திரைகள்” திட்டத்தினை செயல்படுத்திடும் பொருட்டு இந்திய முத்திரை விதிகள் 1925 விதி 3-க் கான உரிய திருத்தம் மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரசின் வழிகாட்டுதல்களின்படி, அரசால் மின்னணு பதிப்பு முறை செயல்படுத்தத்தக்கவாறு அங்கீகரிக்கப்பட்ட திட்ட வழிமுறை (mandate) SHCIL நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

SHCIL மற்றும் பதிவுத்துறைத்தலைவர் அவர்களுக்கும் இடையே ஒப்பந்தம் (agreement) மற்றும் சேவை நிலை ஒப்பந்தம் (Service Level Agreement) 28.05.2009-ல் மேற்கொள்ளப்பட்டது.

இணையம் மூலம் நிர்வகிக்கப்படும் இந்த மின்னணு முத்திரைத்தாள் முறையானது கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களைக் கொண்டதாகவும் உள்ளது:

1. முத்திரைத் தீர்வையினை ரொக்கமாகவோ வரைவோலையாகவோ பணமாற்றம் மூலமாகவோ (RTGS & NEFT) எளிதாகச் செலுத்தலாம்.
2. வசூலித்த முத்திரைத்தீர்வையினை அரசுக் கணக்கில் விரைவாகச் செலுத்தலாம்.
3. மின்னணு முத்திரைத்தாள் தனிப்பட்ட அடையாள எண் (UIN), இரு பரிமாண பட்டைக் குறியீடு (2D Barcode) மற்றும் தவறான முறையில் பயன்படுத்த இயலா வண்ணம் அமைக்கப்பட்டுள்ள நுண் அச்சு முறை (micro print) ஆகியவைகளை உள்ளடக்கப்பட்டு தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது.
4. இச்சான்றினை பதிவு அலுவலர் உடனுக்குடன் சரிபார்த்து ஆவணத்தினைப் பதிவு செய்ய வழிவகை உள்ளது.
5. ஆவணப் பதிவின் போது சம்பந்தப்பட்ட பதிவாளர் மின்னணு முத்திரைத்தாளின் உண்மைத் தன்மையை இணையம் மூலம் சரிபார்த்து, அதனை மீளவும் தவறான முறையில் பயன்படுத்தாவண்ணம் பூட்டுதல் (locking) செய்யப்படுகிறது.

பதிவு பயனாளிகள் மின்னணு முத்திரைத்தாளினை எளிதாகப் பெறுவதற்கு, அருகில் உள்ள ‘அங்கீகரிக்கப்பட்ட வசூல் மையத்தினை’ அணுகி, அதற்கான படிவத்தினை பூர்த்தி செய்து தேவையான தொகையினை ரொக்கமாகவோ, வரைவோலையாகவோ, பணமாற்றம் மூலமாகவோ (RTGS & NEFT) செலுத்தி மாதிரி மின் முத்திரைத்தாளினை பெற்று அதில் குறிக்கப்பட்டுள்ள விவரங்கள் மனுதாரரின் சரிபார்த்தலுக்கு பின் அசல் முத்திரைத்தாளினை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு பெறப்படும் மின்னணு முத்திரைத்தாளினை அனைத்து வகையான ஆவணங்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மின்னணு முத்திரைத் தீர்வை வசூலித்து நிர்வகிக்கும் திட்டத்தினை செயல்படுத்த M/s Stock Holding Corporation of India Ltd., (SHCIL) என்ற நிறுவனத்தினை **“மைய பதிவு பராமரிக்கும் முகமை”** என இந்திய அரசு மற்றும் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

முன்னோடித் திட்டத்தின் செயல்முறை வெற்றியைத் தொடர்ந்து, இத்திட்டம், அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான அனைத்து செயல்பாடுகளையும் மயிலாப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று 27.08.2009 அன்று மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு சுரேஷ்ராஜன் அவர்கள் ஆய்வு செய்தார்கள். இந்நிகழ்ச்சியின் போது வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திரு ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் திரு இரா.சிவகுமார் இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9



வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9